DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 278/2022**

Depositions of Witness for Prosecution Pw 12
Defence
Court

Name : திரு. கணேசன்
Father's Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 26th day of February 2026.

**(A1, A2 Present. )**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது செங்கோட்டை தாலுகா, காலாங்கரையில் வசித்துவருகிறேன். நான் கல்குவாரி ஒன்றை குத்தகைக்கு எடுத்து நடத்திவருகிறேன். வாடிக்கையாளர்களுக்கு தேவையான கருங்கல் ஜல்லி மற்றும் எம்.சான்ட் ஆகியவற்றை விற்பனை செய்துவருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது)

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தபோது, நான் கல்குவாரி நடத்திவருகிறேன் என்றும், இவ்வழக்கின் எதிரி சரவணன் சொந்தமாக லாரி வைத்துள்ளார் என்றும், எனது குவாரியில் தயாராகும் கருங்கல் ஜல்லி மற்றும் எம்.சான்ட் ஆகியவற்றை சரவணன் தனது லாரியில் கொண்டுசென்று விற்பனை செய்வார் என்றும், சில வருடங்களுக்கு முன்பு ஒருநாள் மேற்படி சரவணனின் லாரி டயரை இவ்வழக்கு சம்பவத்தில் இறந்துபோன மாரிச்செல்வம் என்பவர் சேதப்படுத்திவிட்டார் என்றும், இந்த முன்விரோதம் குறித்து எனக்கு தெரியும் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக இவ்வாறு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 278/2022**

Depositions of Witness for Prosecution Pw 13
Defence
Court

| | | |
|---|---|---|
| Name | : | திரு. மணிகண்டன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 26th day of February 2026.

**(A1, A2 Present. )**

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது வேலாயுதபுரத்தில் வசித்துவருகிறேன். நான் தென்காசி வெல்கம் ஸ்டுடியோவில் கடந்த 5 – 6 வருடங்களாக பணிபுரிந்துவருகிறேன். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் நான் எங்கள் போட்டோ ஸ்டுடியோவில் பணியில் இருந்தபோது, தென்காசி காவல் ஆய்வாளர் சில புகைப்படங்களை எங்கள் ஸ்டுடியோவின் ஈமெயிலுக்கு அனுப்பி அதனை பிரிண்ட் எடுத்து கொடுக்க சொன்னார். அதன் அடிப்படையில் அவர் அனுப்பிய புகைப்படங்களை

நான் டெவலப்செய்து பிரிண்ட் போட்டு கொடுத்தேன். அந்த புகைப்படங்கள் தான் தற்போது என்னிடம் காட்டப்படுவது. நான் டெவலப் செய்து கொடுத்த அந்த **புகைப்படங்கள் அ.சா.ஆ. 8 வரிசை ( 32 எண்ணம்)** ஆகும். (65–பி சான்று இல்லாத காரணத்தினால் எதிரிகள் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையின் பேரில் மேற்படி ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது) இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் போட்டோ ஸ்டுடியோவில் பணிபுரிய தகுதியான நபர் என்பதை காட்டக்கூடிய எந்தவொரு ஆவணத்தையும் போலீசாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். பொதுவாக போட்டோவை எடுத்த நபரால்தான் அந்த புகைப்படம் எப்போது, எங்கு வைத்து எடுக்கப்பட்டது என்று சொல்ல முடியும் என்றால் சரிதான். பொதுவாக டிஜிட்டல் முறையில் போட்டோ எடுக்கும்போது நாள், நேரம் போன்ற விவரம் அந்த புகைப்படத்துடன் வந்துவிடும் என்றால் சரிதான். யாருடைய அலைபேசி எண்ணிலிருந்து அல்லது மெயிலிலிருந்து மேற்படி புகைப்படங்கள் எனக்கு அனுப்பப்பட்டன என்ற விவரம் தற்போது எனக்கு நினைவில்லை. புகைப்படத்தை டெவலப் செய்து பிரிண்ட் போடுவதற்கு முறையான பயிற்சி பெற்றிருக்கவேண்டும் அல்லது அதற்குரிய படிப்பை முடித்திருக்கவேண்டும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி புகைப்படங்கள் எங்கள் வெல்கம் ஸ்டுடியோ ஈமெயில் ஐ.டி.க்கு வந்தது. அது குறித்த விவரங்களை எங்கள் ஸ்டுடியோவின் பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்டதா என்றால் அவ்வாறு பதிவேடு நாங்கள் பராமரிப்பதில்லை. மேற்படி புகைப்படங்கள் எங்கள் ஸ்டுடியோவிற்கு அனுப்பப்படவில்லை என்றும் அது என்னால் டெவலப் செய்யப்பட்டு பிரிண்ட் போடப்பட்டவை கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல. பிரிண்ட் போடப்பட்ட புகைப்படங்கள் ஆய்வாளர் எப்போது வாங்கி சென்றார் என்ற விவரம் தற்போது எனக்கு நினைவில்லை. எப்போது அதனை அவர் வசம் கொடுத்தேன் என்பதும் தற்போது எனக்கு நினைவில்லை. எங்கள் ஸ்டுடியோவிற்கு சுமார் 16 – 17 புகைப்படங்கள் அனுப்பப்பட்டன. ரெட்மீ நோட்

மொபைல் போன் மூலமாக வாகனங்கள் புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தனிப்பட்ட நபரால் புகைப்படம்எடுக்கப்பட்டு, பிரிண்ட் போடப்பட்டுள்ளது என்றும், அ.சா.ஆ.8 வரிசை ஆவணங்களுக்கும் எனக்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல. வழக்கு சம்பவம் தொடர்பாக எடுக்கப்பட்ட பல்வேறு புகைப்படங்கள் அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக இருந்த காரணத்தினால் அவை மறைக்கப்பட்டுவிட்டன என்று சொன்னால் சரியல்ல. ஆய்வாளரின் வேண்டுகோளுக்கேற்ப நான் தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் ஸ்டுடியோ முறையாக பதிவுசெய்யப்பட்டு அதற்குரிய லைசன்ஸ் உள்ளதா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் போலீசாரின் கையிருப்பு சாட்சி என்றால் சரியல்ல.

**( மேற்படி குறுக்கு விசாரணை 2ம் எதிரி தரப்பில் ஏற்கப்படுகிறது)**

**மறுவிசாரணை இல்லை.**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 278/2022**

| | | |
|---|---|---|
| Depositions of Witness for | | Prosecution Pw 14 |
| | | Defence |
| | | Court |
| Name | : | திரு. ராஜா |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 26th day of February 2026.

**(A1, A2 Present. )**

**முதல் விசாரணை**

நான் தற்போது பூலாங்குளத்தில் வசித்து வருகிறேன். நான் இருசக்கர வாகன விற்பனை முகவராக பணிபுரிந்துவருகிறேன். இவ்வழக்கு சம்பவத்தில் இறந்துபோன மாரிச்செல்வத்தை எனக்கு தெரியாது. சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் என் மூலமாக ஒரு ஹோண்டா டியோ இருசக்கர வாகனம் விற்பனை செய்யப்பட்டிருந்ததாக சொல்லி தென்காசி காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். அந்த வாகனத்தை நான் எப்போது யாரிடம் வாங்கி

யாருக்கு விற்பனை செய்தேன் என்ற விவரம் தற்போது எனக்கு நினைவில்லை. ஆனால் என்னிடம் வண்டி வாங்கி சென்ற நபர் கொலை செய்யப்பட்டுவிட்டார் என்று அதன் பிறகு நான் தெரிந்துகொண்டேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சொன்னதுபோல், என்னிடம் வண்டி வாங்கி சென்ற நபர் கொலை செய்யப்பட்டுவிட்டதாக தெரிந்துகொண்டதாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. என்னை வழக்கு சம்பந்தமாக ஆய்வாளரோ, வேறு எந்த போலீசாரும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

**( மேற்படி குறுக்கு விசாரணை 2ம் எதிரி தரப்பில் ஏற்கப்படுகிறது)**

**மறுவிசாரணை இல்லை.**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi